# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
## அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு

**வெற்றிடங்கள் - வாகன ஓட்டுநர் (PL – 3)**

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பண்டங்களின் அபிவிருத்திக்கும் ஊக்குவிப்புக்கும் பொறுப்பான அதியுயர்ந்த நிலையிலிருக்கும் அரசாங்க நிறுவனமே இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையாகும்.

EDB இன் கேந்திர திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறன ஏற்றுமதி இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பதற்காக மேற்கூறப்பட்ட **வாகன ஓட்டுநர்** பதவியில் இணைய விரும்பும் நிரூபிக்கப்பட்ட இயலுமையுடைய தொழில்சார்ந்த திறன்களையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலை விபரம்

சபையின் வாகனங்களை சிறப்பான முறையிலும் பொருளாதார மேம்பட்டுக்குமாக பராமரித்தலும் செலுத்துதலும்.

### தகைமைகள்

கா. பொ. த சாதாரணதரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்து இருத்தலும் அவற்றில் குறைந்தது இரு படங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

### தொழில் தகைமைகள்

பார ஊர்தி செலுத்துவதற்கான உரிய அனுமதி பத்திரத்தையும் பெற்றிருத்தலுடன் குறைந்தது மூன்று வருட பார ஊர்தி ஓட்டுநராக பிரசித்தி பெற்ற நிறுவனத்தில் தொழில் அனுபவமும் பெற்றிருத்தல்.

### சம்பள அளவுத்திட்டம் (PL- 3)

ரூ.26,290/= 10x270 - 10x300 - 10x350 -39,490/=

முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 02 / 2016 11 ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு அமைவாகவே சம்பளங்கள் வழங்கப்படும்.

### வயதெல்லை

18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அரசாங்க திணைக்களங்கள் , கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனகள் மற்றும் உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமட்டது.

### ஆட்சேர்ப்பு முறை (PL- 3)

எழுத்துப்பரீட்சை , செய்முறை சோதனை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில்.

**ஏனைய நன்மைகள்**

- ஊழியர் மற்றும் அவரது நெருங்கிய (ஆண்/பெண்) குடும்பத்தவர்களுக்கான வைத்தியசாலை மற்றும் வெளியாக மருத்துவ செலவுகளடக்கிய கவர்சிகரமான மருத்துவத்திட்டம்.
- இலகு விகித வட்டியில் அமைந்த துயரக்கடன்திட்டம்.
- இலகு விகித வட்டியில் அமைந்த கவர்ச்சிகரமான வீட்டுக்கடன்திட்டம்.
- வருடாந்த மிகையூதியம் மற்றும் பாவிக்கப்படாத மருத்துவ லீவிற்கான பணக்கொடுப்பனவு.
- ஊ.சே.நி - ஊழியர் - 10% சபை - 15% மற்றும் ஊ. ந. நி - சபை 3%

**விண்ணப்பிக்கும் முறை**

EDB ன் 5 ஆம் மட்டம் HRM பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது www.srilankabusiness.com என்ற இணையத்தில் “Announcement” என்ற பிரிவின்கீழ் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விதிக்கப்பட்ட படிவங்களிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத்தபாலில் 27.07.2017 திகதியன்று அல்லது அதற்கு முன்னராக EDB இன் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பபாடல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப்பெயர் குறிப்பிடப்படல் வேண்ண்டும்.

அரசதுறை ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனத்தலைவர் ஊடாகவே அனுப்பபாடல் வேண்டும். இறுதித் தினத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விண்ணப்பத்தின் முன் பிரதி ஒன்றை EDB இற்கு அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் மதியுரைக்கப்படுகின்றனர்.

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை,**
NDB-EDB **கோபுரம்**, 42, **நவம் மாவத்தை, கொழும்பு**- 02
**தொலைபேசி**- 011 - 2300705 - 11 **தொலைநகல்**- 011 2300715
**இணையம்** - www.srilankabusiness.com